# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No.39/2024

dated : 24.03.2026

D.W. 3

Name ரஞ்சிதம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது கோயம்புத்தூரில் வசித்து வருகிறேன். என்னுடைய கணவர் என்னுடைய அத்தை மகன் ஆவார். என் தங்கையை என் கணவரின் தம்பிக்கு திருமணம் செய்து வைத்துள்ளோம். என்னுடன் பிறந்த சகோதரிகளுக்கு என் தந்தைதான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். என் தந்தை இறப்பிற்கு நான் வரவில்லை என்றால் சரியல்ல. நான் கலந்து கொண்டேன் ஆனால் நான் வருவதற்கு முன்பே நல்லடக்கத்திற்காக எடுத்துச் சென்றுவிட்டார்கள். 1ம் பிரதிவாதி என் தம்பி. அவர்தான் என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். இவ்வழக்கின் சொத்து என் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்தை தவிர வேறு சொத்துக்கள் இல்லை. சொத்துக்கள் இதுவரை பிரித்துக் கொள்ளப்பட்டதா இல்லை என்று எனக்கு தெரியாது. என் தந்தை உயிருடன் இருக்கும்போது சொன்னார்கள் உயில் எழுதினாரா இல்லையா என்று எனக்கு தெரியாது. என் தாயாரின் பண்ட பாத்திரங்கள் இன்னும் பிரித்துக் கொள்ளப்படவில்லை என்றால்

சரிதான். வழக்கு சொத்தை பிரித்துக் கொள்வதற்கு முன்பு ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பேசிக் கொண்டார்களா என்று எனக்கு தெரியாது என்னை அழைக்கவில்லை. என் தந்தை இறப்பதற்கு முன்பு ஓராண்டாக உடல் நிலை சரியில்லாமல் இருந்து வந்தார் என்றால் சரிதான். என் தாயார் இறப்பதற்கு 4 வருடங்களுக்கு முன்பிருந்தே 3ம் வாதி ஜெயா வீட்டில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல அவ்வப்போது வந்து செல்வார் நிரந்தரமாக தங்கியதில்லை. 1ம் பிரதிவாதிதான் என்னை முதல் விசாரணை வாக்குமூலம் தயாரிப்பதற்கு வழக்கறிஞர் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார் என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.03.24 16:13:25 +0530